# இராம கோபாலன்

*நிறுவன அமைப்பாளர்*

59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


27-6-2010

## இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை! பூந்தமல்லி எம்.எல்.ஏ. திரு. சுதர்ஸனம் அவர்கள் மறைவுக்கு அஞ்சலி..

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினரும், சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான திரு. சுதர்ஸனம் அவர்கள் மறைவுக்கு இந்து முன்னணி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லோரிடமும் பழகும் பண்பாளர் திரு. சுதர்ஸனம் அவர்கள். சிறந்த தேசியவாதியும், சிறந்த தேசபக்தரும் ஆவார்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், மற்றும் காங்கிரஸ் கட்சியினருக்கும் இந்து முன்னணி ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா நற்கதி அடைய இந்து முன்னணி எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறது.

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் இடம்பெற்ற பிரிவினைவாத, நாத்திக நாசகார வாடையை முதல்வர் கவனத்தில் கொள்ள இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டை அபஸ்வரம் தட்டாமல் மக்களின் எதிர்பார்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து நடத்தி வருகிறார் தமிழக முதல்வரும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுத் தலைவராகவும் உள்ள திரு. கருணாநிதி அவர்கள்.

இம்மாநாட்டில் நடைபெற்ற கவியரங்கத்தில் கலந்துகொண்ட திரு. தணிகைச் செல்வன் என்பவர் ''அயோத்திராமன் அயோக்கிய ராமன் என்பது ஈரோட்டு ராமசாமிக்கும், சீதைக்கும் தெரியும்... நான் ஈரோட்டு ராமசாமியின் பக்தன்.. என்றும், சேது சமுத்திரத் திட்டத்தைத் தடுப்பது வடநாடு என்றும் வடநாடு, தென்னாடு பிரச்னையை மையப்படுத்திப் பேசியுள்ளது கண்டிக்கத்தக்கது.

இக்கவியரங்கம் இராமாயணத்தை 'அவதார புருஷன்' என்று கவிதை இலக்கியம் படைத்த கவிஞர் வாலி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கவியரங்கப் பார்வையாளராக இருந்தார் தமிழக முதல்வர் அவர்கள்.

இத்தகைய பேச்சுகள் பக்தர்களை வேதனை அடையச் செய்துள்ளது, தேசிய சிந்தனையோடும், உலக அளவில் தமிழ் செம்மொழி பரவ வேண்டும் என்ற நோக்கிலும் இம்மாநாட்டை மேதகு ஜனாதிபதி அவர்களைக் கொண்டு துவக்கிய தமிழக முதல்வரின் செயலுக்கு இத்தகையோர் பேச்சு ஊறுவிளைவிப்பதாக அமைந்துள்ளது என்பது தேசபக்தர்களைக் கவலை கொள்ளச் செய்துள்ளது. இதனை முதல்வர் கவனத்தில் கொள்ள இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

## அமர்நாத் பயணத்திற்குக் கட்டுப்பாடு விதிப்பது பிரிவினைவாதிகளா? கண்டிக்கிறோம்..

சில ஆண்டுகளுக்கு முன் அமர்நாத் யாத்திரை செல்வோர் தங்க ஏற்பாடு செய்வதில் பிரச்னை ஏற்பட்டு சுமுக தீர்வு ஏற்பட்டது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில், இந்த ஆண்டு வழக்கமாக 55 நாட்கள் நடக்கும் இந்த யாத்திரையை 15 நாட்களுக்குத்தான் நடத்த வேண்டும் என்று பிரிவினைவாத இயக்கமான ஹுரியத் மாநாட்டு அமைப்புத் தலைவர் அலி கிலானி தெரிவித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

இதனை மத்திய அரசும், காஷ்மீர் மாநில அரசும் கண்டிக்க வேண்டும். வழக்கம்போல் அமர்நாத் யாத்திரை நடைபெற விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இத்தகைய பிரிவினைவாதங்களை வளரவிட்டால் மத வேறுபாடுகள் வளர்ந்து நாட்டின் பொது அமைதிக்குக் கேடுவிளையும் என்று எச்சரிக்கிறோம்.